**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**
**மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்**
**முன்னிலை :- திரு. V. சுந்தரராஜ், M.L.,**
**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்**
**2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28 ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம்,**
**ஆவணி திங்கள் 12 ஆம் நாள்**

**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண். 61/2023**
CNR. No.TNTV02-000198– 2023

1. சாந்தகுமாரி
2. மைனர். ஜெயகண்ணன்
3. மைனர். தீபக் கண்ணன்
4. லலிதா

(2 மற்றும் 3 ம் இளவர் மனுதாரர்களுக்காக அவர்களது தாயாருமான காப்பாளருமான 1ம் மனுதாரர் சாந்தகுமாரி மூலமாக)

............ **கோருரிமையாளர்கள்**

-எதிர்-

1. முரளி,
2. மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்,
விழுப்புரம்.

3. எம்.பாலாஜி
4. எம். துளசிராமன்
5. கிளை மேலாளர்,
யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்
திருவள்ளூர். ......... **எதிர்மனுதாரர்கள்**

இந்த மனு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அங்கு மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண்.09/2023 எண்ணிடப்பட்டு, இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் அதே எண்ணிடப்பட்ட மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண்.61/2023 என எண்ணிடப்பட்டது. இம்மனு என் முன்பாக 23.08.2024ம் தேதியன்று இறுதியான விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/ கோருரிமையாளர்கள் தரப்பில் வழக்குரைஞர்கள் திரு. த.மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. ஸ்டாலின் அவர்கள் ஆஜராகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் ஆஜரில்லாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்தும், கோருரிமையாளர்கள் மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் எடுத்துரைத்த இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கலாகும்..........

## உத்தரவு

கடந்த 08.07.2020ம் தேதியன்று 1ம் கோருரிமையாளர் தனது கணவர் விபத்தில் ஏற்பட்ட கொடுங்காயங்களினால் இறந்ததற்காக கோருரிமையாளர்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகையான ரூ.60,00,000/-த்தினை மனுதாக்கல் செய்த நாள் முதல் உரிய வட்டியுடன் எதிர்மனுதாரர்கள் செலுத்தும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும்

கோருரிமையாளர் தரப்பில் பிரிவு 140 & 166 M.V. Act 1988 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. கோருரிமையாளர்கள் மனுவின் சுருக்கம் :-**

கடந்த 08.07.2022 அன்று மதியம் 02.00 மணியளவில் இறந்த மணிகண்டன் பணிக்கு செல்வதற்காக சென்னை - சிதம்பரம் செல்லும் TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட அரசுப்பேருந்தில் பயணித்து கொண்டிருந்தபோது, சென்னை - திண்டிவனம் மார்க்கமாக உள்ள GST சாலையில் கடமலைப்புத்தூரை தாண்டி போலம்மாள்குளம் சந்திப்பில் இருந்து சுமார் 450 மீட்டர் தொலைவில் திண்டிவனம் மார்க்கமாக உள்ள சாலையில் இரும்பு கம்பி லோடு ஏற்றி சென்ற TN.12-AQ-9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரியின் மீது மேற்படி பேருந்து மோதியதில் மணிகண்டன் உட்பட 3 ஆண்களும், 2 பெண்களும் பேருந்தின் உள்ளே இறந்துவிட்டதாகவும், மேற்படி பேருந்தினை அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டிவந்து ரோட்டில் நின்ற லாரியின் மீது மோதி மேற்படி விபத்தினை ஏற்படுத்தி மணிகண்டனுக்கு சம்பவ இடத்திலேயே இறப்பையும் ஏற்படுத்தியுள்ளார். பின்னர், இறந்த மணிகண்டன் உடலை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சடலக்கூராய்வு செய்யப்பட்டு உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது .

**2)** TN.12-AQ-9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரி ஓட்டுநர் மற்றும் TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட SETC தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழக பயணிகள் பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் ஆகியோர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை அனுசரிக்காமலும் ஓட்டிச் சென்றதால் நிகழ்ந்ததாகும். தாவா விபத்து குறித்து மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் மீது செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் காவல் நிலையத்தில், குற்ற எண்.230/2022, இதச பிரிவு 304(A)ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, கோருரிமையாளர்கள் கோரும் இழப்பீட்டு வருமான இழப்பு, நிரந்தர இழப்பு, வருங்கால வருமான இழப்பு போன்றவற்றிற்கு ரூ.60,00,000/-ஐ எதிர்மனுதாரர்கள் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்.

**3) <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

கோருரிமையாளர்கள் தாக்கல் செய்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், கோருரிமையாளர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை என்றும், 3ம் எதிர்மனுதாரர் TN.12-AQ-9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரியினை இடதுபுற சாலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததால் பின்புறம் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது என்றும், மேற்படி விபத்தானது தேசிய நெடுஞ்சாலையில் பழுதடைந்த

வாகனங்களை போதிய பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கக்கூடாது என்ற விதியினை மீறி இரும்பு கம்பிகளை வெளிப்புறமாக நீட்டி வைத்து, அபாயகரமான நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை தெரிவிக்கும் வகையில் எவ்வித பிரதிபலிப்பான்களும், சமிக்ஞைகளும் இல்லாததால் இந்த விபத்து நிகழ்ந்தது என்றும், 1ம் எதிர்மனுதாரரான ஓட்டுனர் மீது பதிவு செய்த வழக்கானது பொருண்மை தவறு என தள்ளுபடி செய்யப்படவேண்டுமெனவும், கோருரிமையாளர்கள் கோரிய நஷ்ட ஈடு தொகையை கொடுக்க 2ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றும், 5ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மற்றும் அதன் ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் கோருரிமையாளர் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என தெரிவிக்கிறார்.

**4) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் -**

1) TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட SETC தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழக பயணிகள் பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் ஆகியோர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை அனுசரிக்காமல் TN.12-AQ-9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரியின் மீது மோதி 1ம் கோருரிமையாளரின் கணவருக்கு சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியுள்ளாரா?

2) கோருரிமையாளர்களுக்கு இழப்பீட்டு தொகை எதிர்மனுதாரர்களிடமிருந்து கிடைக்கத்தக்கதா?

3) கோருரிமையாளர்கள் பெறும் இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

4) இம்மனுவில் கோருரிமையாளர் தரப்பில் , கோருரிமையாளர் கோ..சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டும், கோ.சா.1ன் மூலமாக கோ.த.சா.ஆ.1 முதல் கோ.த.சா.ஆ. 10 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட அரசுப்பேருந்தின் நடத்துநர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6) பிரச்சினை எண்.1-**

கோருரிமையாளர்கள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் திரு.த.மணிவண்ணன் தனது வாதுரையில், கடந்த 08.07.2022 அன்று மதியம் 02.00 மணியளவில் இறந்த மணிகண்டன் பணிக்கு செல்வதற்காக சென்னை - சிதம்பரம் செல்லும் TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட அரசுப்பேருந்தில் பயணித்து கொண்டிருந்தபோது, சென்னை - திண்டிவனம் மார்க்கமாக உள்ள GST சாலையில் கடமலைப்புத்தூரை தாண்டி போலம்மாள்குளம் சந்திப்பில் இருந்து சுமார் 450 மீட்டர் தொலைவில் திண்டிவனம் மார்க்கமாக உள்ள சாலையில் இரும்பு கம்பி லோடு ஏற்றி சென்ற TN.12-AQ-9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரியின் மீது மேற்படி பேருந்து மோதியதில் மணிகண்டன்

உட்பட 3 ஆண்களும், 2 பெண்களும் பேருந்தின் உள்ளே இறந்துவிட்டதாகவும், மேற்படி பேருந்தினை அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டிவந்து ரோட்டில் நின்ற லாரியின் மீது மோதி மேற்படி விபத்தினை ஏற்படுத்தி மணிகண்டனுக்கு சம்பவ இடத்திலேயே இறப்பையும் ஏற்படுத்தியுள்ளார். பின்னர், இறந்த மணிகண்டன் உடலை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சடலக்கூராய்வு செய்யப்பட்டு உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது என்று கூறியுள்ளார்.

7) TN.12-AQ-9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரி ஓட்டுநர் மற்றும் TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட SETC தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழக பயணிகள் பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் ஆகியோர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை அனுசரிக்காமலும் ஓட்டிச் சென்றதால் நிகழ்ந்ததாகும். தாவா விபத்து குறித்து மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் மீது செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் காவல் நிலையத்தில், குற்ற எண்.230/2022, இதச பிரிவு 304(A)ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, 1ம் கோருரிமையாளர் மேற்படி விபத்தின் காரணமாக ஏற்பட்ட காயங்களின் விளைவாக தனது கணவர் இறந்ததற்கு இழப்பீடு கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும், கற்றறிந்த கோருரிமையாளர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் கோருரிமையாளர்கள்

மனுவில் கோரியுள்ளவாறு நிரூபித்து உள்ளதாகவும் மனுவை அனுமதிக்கும்படி வாதிட்டார்.

**8)** மாறாக, 2ம்எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. ஸ்டாலின் அவர்கள் தனது வாதுரையில் விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்படவில்லை என்றும் 3ம் எதிர்மனுதாரர் தேசிய நெடுஞ்சாலையில் பழுதடைந்த வாகனங்களை போதிய பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கக்கூடாது என்ற விதியினை மீறி இரும்பு கம்பிகளை வெளிப்புறமாக நீட்டி வைத்து, அபாயகரமான நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை தெரிவிக்கும் வகையில் எவ்வித பிரதிபலிப்பான்களும், சமிக்ஞைகளும் இல்லாததால் இந்த விபத்து நிகழ்ந்தது எனவும், 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் மீது பதிவு செய்த வழக்கானது பொருண்மை தவறு என தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது எனவும், வாதிட்டார்.

**9)** இந்த தீர்ப்பாயம் சாட்சிகளையும், சான்றாவணங்களையும் ஆராயும்போது அதிலும் குறிப்பாக, கோ.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை (நகல்) மற்றும் ம.சா.1 சாட்சியத்தையும் ஆராயும்போது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட SETC தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழக பயணிகள் பேருந்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வருகிறது. கோ.சா.1 சாட்சியம் மற்றும் கோ..த.சா.ஆ.1ஐ எதிர்த்து எதிர்மனுதாரர்

தரப்பில் பேருந்தின் நடத்துநர் திரு.தனவேல் அவர்கள் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.1 TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் நடத்துநர் என்றும், சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் இரும்பு கம்பிகளை ஏற்றிய டிரெய்லர் லாரி சாலையின் இடது புறத்தில் எவ்வித எச்சரிக்கை பலகையும் இன்றி நிறுத்திவைக்கப்பட்டு இருந்ததால் மேற்படி பேருந்தின் ஓட்டுநர் அந்த லாரியின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்றும், தேசிய நெடுஞ்சாலையில் பழுதடைந்த வாகனங்களை போதிய பாதுகாப்பின்றி மனித உயிருக்கு அபாயம் ஏற்படும் வகையில் இரும்பு கம்பிகளை லாரியின் வெளிப்புறம் நீட்டிவைத்து பின்னால் வரும் வாகனங்களுக்கு எவ்வித சமிக்ஞைகளும் வைக்காமல் மேற்படி லாரி நிறுத்திவைக்கப்பட்டு இருந்ததே இந்த விபத்திற்கு காரணம் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிர்மனுதாரர் சாட்சியம் மற்றும் இந்த வழக்கின் கோ.த.சா.ஆ.1 ஆகியவற்றை பார்வையிடும்போது சென்னை - சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் 4 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN.12-AQ-9669 என்ற பதிவெண் கொண்ட இரும்பு கம்பி லோடுடன் கூடிய டிரெய்லர் லாரி ரோட்டின் இடதுபுறமாக நின்று கொண்டிருந்தது என தெரியவருகிறது. மேற்படி டிரெய்லர் லாரி நிறுத்திவைக்கப்பட்டு இருந்ததற்கான எவ்வித சமிக்ஞைகளும், முன்னெச்சரிக்கை பலகைகளும் வைக்காமல் இருந்துள்ளது தெரியவருகிறது. எனவே, விபத்திற்கு அரசு பேருந்தின் ஓட்டுநர் மற்றும் டிரெய்லர் லாரிஓட்டுநர்

ஆகியோரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது என இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**10) பிரச்சினை எண்.2 -**

மேலே கண்ட முடிவின் படி TN-32-N-3884 என்ற பதிவெண் கொண்ட SETC தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழக பயணிகள் பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் மற்றும் தேசிய நெடுஞ்சாலையில் எவ்வித சமிக்ஞையுமின்றி TN.12-AQ-9669 என்ற பதிவெண் கொண்ட இரும்பு கம்பிகள் வெளியில் நீட்டிக்கொண்டு இருந்ததன் காரணமாகவும் மேற்படி விபத்திற்கு காரணம் என்பதால் மேற்படி இரு வாகனங்களின் உரிமையாளர்கள் பொறுப்பாவார்கள். மேற்படி லாரியின் உரிமையாளரான 5ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நடைமுறையில் உள்ளது. எனவே, 2ம் மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. விபத்திற்கு காரணம் என்பதால் மேற்படி வாகனத்தின் உரிமையாளரான 2ம் எதிர்மனுதாரரும், 4ம் எதிர்மனுதாரரும் பொறுப்பாவார்கள் எனவே, 2ம் எதிர்மனுதாரர் மற்றும் 4ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 5ம் எதிர்மனுதாரர் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ சரிபாதியை கோருரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்றும் பிரச்சினை எண்.2 க்கு தீர்வு காணப்படுகிறது.

**11) பிரச்சினை எண்.3-**

கோருரிமையாளர் இம்மனுவின் மூலம் எவ்வளவு தொகை இழப்பீடு பெறத் தகுதியுடையவர் என்று ஆராய வேண்டியுள்ளது. கோருரிமையாளர்கள் தங்களது மனுவில் மொத்தம் ரூ.60,00,000/- நஷ்ட ஈடு கேட்டுள்ளார்கள். கோ.சா.1 சாந்தகுமாரி அவருடைய முதல் விசாரணையில், விபத்திற்கு முன்னர் தனது கணவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன், திடகாத்திரத்துடனும், நல்ல சுறுசுறுப்புடனும் செயல்பட்டு வந்தார். தனது கணவர் விபத்திற்குள்ளாகாமல் இருந்திருந்தால் சுமார் 75 வயது வரை உயிர் வாழ்ந்து தனது குடும்பத்திற்கு வருமானம் ஈட்டி, தனது மகன்கள் மற்றும் மாமியாரின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தி, குடும்ப பொருளாதார நிலையை மேலோங்க செய்திருப்பார். தனது கணவரை இழந்த தானும், தந்தையை இழந்து தனது மகன்களும், மகனை இழந்து தனது மாமியாரும் துன்புறுவதாக கூறியுள்ளார். கோ.சா.1 அவரது முதல் விசாரணையில் தனது கணவர் விபத்து சமயம் Shri Ganesh Interior (P) Ltd -ல், Electrical & Electronic Engineer ஆக வேலை பார்த்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வந்ததாக கூறியுள்ளார். அதன்படி அவருக்கு மாத அடிப்படை சம்பளம் ரூ.25,000/-ம் வழங்கப்பட்டுள்ளதாக கோ.சா.ஆ.8 ன்படி தெரிய வருகிறது. அதையே அவருடைய மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12)** மேலும், இறந்துபோன மணிகண்டனை சார்ந்து கோருரிமையாளர்கள் நான்கு பேர்கள் உள்ளார்கள். மாண்புமிகு உச்ச நீதிமன்றம், Sarala Varma and Others Vs. Delhi Transport Corporation and another, 2009 ACJ 1298 என்ற முன்தீர்ப்பின்படி இறந்துபோன மணிகண்டனை சார்ந்து நான்கு நபர்கள் இருப்பதால் அவருடைய மொத்த மாத வருமானத்தில் ரூ.25,000/- நான்கில் ஒரு பகுதியான ரூ.6250/-ஐ கழித்தால் மீதமுள்ள ரூ.18,750/- அவருடைய மாத வருமானம் என்று கணக்கிடப்படுகிறது. மேலும் இறந்துபோன மணிகண்டன் நிரந்தர வேலை வாய்ப்பு பெற்றிருந்தார் என்பதற்கு கோ.த..சா.ஆ.8 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எதிர்கால வருமான வாய்ப்பு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. Sarala Varma வழக்கின்படி இறந்துபோன மணிகண்டன் என்பவர் நிரந்தர வேலைவாய்ப்பு பெற்றிருந்ததாகவும், அவர் விபத்து சமயத்தில் 33 வயதுடையவராகவும் கோ.சா.ஆ.2 ன்மூலம் தெரிய வருகிறது. எனவே, அவருக்கு எதிர்கால வருமான வாய்ப்பு 50 சதவீதமாக கூடுதல் ரூ.9,375/- கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13)** விபத்தில் இறந்துபோன மணிகண்டன் மாத சம்பளம் ரூ.28,125/-ஐ 12 ஆல் பெருக்கினால் ரூ.3,37,500/- என்றும், விபத்தில் இறந்துபோன மணிகண்டன் வயது 33 என்று கோ.த.சா.ஆ.2 ன் படி கணக்கிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2009 ACJ 1298 Sarala Varma Vs. Delhi Transport

Corporation and Others என்ற வழக்கில் காட்டியுள்ள வழி காட்டுதலின் அடிப்படையில் பெருக்கல் குறியீடு 16 என நிர்ணயம் செய்யப்பட்டு இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன மணிகண்டனுக்கு வயது 33 என்பதால் பெருக்கல் குறியீடு 16 ஐ 3,37,500/- ல் பெருக்கினால் ரூ.54,00,000/- வருமான இழப்பாக கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. 1ம் கோருரிமையாளர் அவருடைய முதல் விசாரணையில், விபத்தின் காரணமாக தனது கணவர் இறந்ததினால் தனது கணவர் மூலம் கிடைத்து வந்த அன்பு, பாசத்தை இழந்துவிட்டதாகவும், 2 மற்றும் 3 ம் இளவர் மனுதாரர்கள் தங்களது தந்தையை இழந்து தந்தையின் மூலம் கிடைத்த அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்துவிட்டார் என்றும் 4 ம் மனுதாரர் தனது மகனை இழந்து அவர் மூலம் கிடைத்த அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்துவிட்டார்கள் என்றும் கூறியுள்ளார்கள். எனவே, கோருரிமையாளர்கள் அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்ததற்காக தலா ரூ.25,000/- (மொத்தம் ரூ.1,00,000/-) கிடைக்கத்தக்கது என்றும், இறந்துபோன பாலு என்பவரின் ஈமக்கிரியை செலவிற்காக (Loss of Funeral expenses) ரூ.15,000/- கிடைக்கத்தக்கது என்றும், ஆஸ்தி இழப்பிற்காக (Loss of Estate) ரூ.15,000/-மும் தீர்வு கண்டு இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அத்துடன் முதல் மனுதாரருக்கு தனது கணவரின் நல்லுறவை இழந்தமைக்காக ரூ.40,000/- (Loss of Consortium) வழங்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, கோருரிமையாளர்களுக்கு

ஒட்டு மொத்த இழப்பீடாக ரூ.55,70,000/-த்தை 2 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் வழங்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் பிரச்சினை எண்.3 க்கு தீர்வு காணப்படுகிறது.

**14)** மேற்படி கணக்குகளின் படி மொத்த இழப்பீடாக கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வருமான இழப்பு | ரூ. | 54,00,000/- |
| 2. | 1 முதல் 4 கோருரிமையாளர்களுக்கு அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்ததற்காக தலா ரூ.25,000/- வீதம் | ரூ. | 1,00,000/- |
| 3. | ஈமக்கிரியை செலவிற்காக | ரூ. | 15,000/- |
| 4. | ஆஸ்தி இழப்பிற்காக | ரூ. | 15,000/- |
| 5. | முதல் கோருரிமையாளர் தன் கணவரின் நல்லுறவு இழப்பிற்காக | ரூ. | 40,000/- |
| | **மொத்தம்** | **ரூ.** | **55,70,000/-** |

இறுதியில், மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

1) கோருரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.55,70,000/-ஐ** 2ம் எதிர்மனுதாரர் மற்றும் 5ம் எதிர்மனுதாரர் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ தலா சரிபாதியை அதற்குரிய வட்டியுடன் சேர்த்து இழப்பீடு வழங்கவேண்டுமென்றும், கோப்பிற்கு எடுத்த நாளிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா,

விளமல் கிளை, திருவாரூர் **கணக்கு எண்.CJMTVR612023TNSTC**, IFSC. SBIN0004266 – **ஐ** மாறுதல் மூலம் 2ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தும், ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் **கணக்கு எண்.CJMTVR612023UIIC**, IFSC.SBIN0004266 – **ஐ** மாறுதல் மூலம் 5ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தும் நீதிமன்ற **Email ID. tvr.cjm-tn@indiancourts.nic.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி முழு தொகையை வட்டி, செலவுத்தொகையுடன் எம்.சி.ஓ.பி. 61/2023 தீர்ப்பாயத்தின் பெயரில் செலுத்தியவுடன் முதல் கோருரிமையாளருக்கு **ரூ.18,70,000/-மும்,** மேற்படி முழுதொகைக்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் சேர்த்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. **4**ம் மனுதாரருக்கு ரூ. **7,00,000/- ம்** (ஏழு இலட்சம் மட்டும்) பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

3) 2 மற்றும் 3ம் கோருரிமையாளர்கள் இளவர்களாக இருப்பதால் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட அவர்களது பங்களிப்பு இழப்பீட்டுத்தொகையான தலா **ரூ.15,00,000/- (கூடுதல் ரூ.30,00,000/-)** முழுவதையும் ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், 2 மற்றும் 3ம் இளவர்களின் பராமரிப்பு செலவிற்கு பணம் தேவைப்படும் பட்சத்தில் அதற்குரிய வட்டி தொகையை மட்டும்

அவருடைய தாயாரும், பாதுகாவலருமான 1ம் கோருரிமையாளர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும், இளவர்கள் உரிய வயதினை அடைந்தவுடன் அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

4) கோருரிமையாளர்கள் செலுத்தவேண்டிய மீதிநீதிமன்றக் கட்டணமான ரூ.54,595/-ஐ ஒரு மாத காலத்திற்குள் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

4) வழக்கறிஞர் கட்டணம் ரூ.65,125/-

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
DN: cn=V SUNDARARAJ, st=TAMIL NADU, c=+91
Date: 2024.08.28 20:21:00 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி /
தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

**<u>கோருரிமையாளர்கள் தரப்பு சாட்சி -</u>**

கோ.சா.1 -- திருமதி.சாந்தகுமாரி (முதல் கோருரிமையாளர்)

**<u>கோருரிமையாளர்கள் தரப்பு சான்றாவணங்கள் -</u>**

கோ.த.சா.ஆ.1 -- 08.07.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை, அச்சரப்பாக்கம் காவல்நிலையம் உண்மை நகல்

| | | |
|---|---|---|
| **கோ.த.சா.ஆ.2** | -- | 09.07.2022 **தேதியிட்ட இறப்பு அறிக்கை அசல்** |
| **கோ.த.சா.ஆ.3** | -- | 09.07.2022 **தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை நகல்** |
| **கோ.த.சா.ஆ.4** | -- | 09.07.2022 **தேதியிட்ட** M.V.Report TN-32-N-3884 TNSTC **நகல்** |
| **கோ.த.சா.ஆ.5** | -- | 09.07.2022 **தேதியிட்ட** M.V.Report TN-12-AQ-9669 Tralior Lorry **நகல்** |
| **கோ.த.சா.ஆ.6** | -- | 03.08.2022 **தேதியிட்ட வாரிசு சான்றிதழ் நகல்** |
| **கோ.த.சா.ஆ.7** | -- | **மாற்று சான்றிதழ்** - ADJ **தர்மாம்பாள் பாலிடெக்னிக் நகல்** |
| **கோ.த.சா.ஆ.8** | -- | 31.10.2022 **தேதியிட்ட** Shri Ganesh Interiors Salary Certificate **அசல்** |
| **கோ.த.சா.ஆ.9** | -- | 2021-2022 **வருமான வரி சான்று கணினி நகல்** |
| **கோ.த.சா.ஆ.10** | -- | 2022-2023 **வருமான வரி சான்று கணினி நகல்** |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** -

எ.ம.சா.1 திரு. தனபால் - **நடத்துநர்**

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -** இல்லை

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
DN: cn=V SUNDARARAJ, st=TAMIL NADU, c=+91
Date: 2024.08.28 20:21:12 +0530

**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி** /

**தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர்**,

**திருவாரூர்**.